www.Padasalai.Net www.TrbTnpsc.com

உரைநடை உலகம்

இயல் 6

# ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

293Q3G

**நுழையும்முன்**

பன்மொழிப் புலமையும் பல்துறை ஆளுமையும் கொண்ட ஆனந்தரங்கர் புதுச்சேரி வரலாற்றினைப் பதிவு செய்தவரில் முதன்மையானவர். அவருடைய நாட்குறிப்புகள் 18ஆம் நூற்றாண்டின் புதுவை வரலாற்றினை அறிந்துகொள்ள நமக்குக் கிடைத்த அரிய பெட்டகமாகும். புதுச்சேரியில் பிரெஞ்சு ஆட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும் அவரின் வாழ்வோடு ஒன்றியிருப்பது ஓர் அரிய நிகழ்வு.

நாட்குறிப்பு என்பது தனிமனிதர் ஒருவரின் அன்றாட நிகழ்வுகளை அல்லது பணிகளைப் பதிவு செய்யும் ஏடாகும். இதனை ஆங்கிலத்தில் டைரி என்று அழைப்பர். டைரியம் என்னும் இலத்தீன் சொல்லின் மூலமான டைஸ் என்ற சொல்லில் இருந்து இச்சொல் உருவாயிற்று.

நாட்குறிப்புகளின் முன்னோடியாகத் திகழ்வது EPHEMERIDES என்று அழைக்கப் பெறும் கிரேக்கக் குறிப்பேடு ஆகும். இச்சொல் ஒரு நாளுக்கான முடிவு என்னும் பொருளைத் தரும். முகலாய மன்னர்களில் பாபர் காலம் முதல் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் இருந்து வந்துள்ளது. ஔரங்கசீப் ஆட்சிக்காலத்தில் நாட்குறிப்பு எழுதுவது தடை செய்யப்பட்டிருந்தது. 1498இல் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கடல்வழியைக் கண்டுபிடித்த போர்ச்சுகீசிய மாலுமி வாஸ்கோடகாமா நாட்குறிப்பு எழுதும் பழக்கம் உள்ளவர். அவருடைய நாட்குறிப்புகள் ஆல்வாரோ வெல்லோ என்பவரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆனந்தரங்கர் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பிரெஞ்சுக் கிழக்கிந்திய உரைபெயர்ப்பாளராகவும் துய்ப்ளே என்ற பிரெஞ்சு ஆளுநரின் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர். இவருடைய நாட்குறிப்புகள் 25 ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துவன. அக்காலத்திய பிரெஞ்சு அரசு பற்றி அறிய உதவும் சிறந்த வரலாற்றுக் கருவூலமாகவும் ஆவணமாகவும் இலக்கியமாகவும் இவருடைய நாட்குறிப்புகள் திகழ்கின்றன.

**ஆனந்தரங்கர்**



பிரான்சுவா மர்த்தேனுக்குப் பிறகு கியோம் ஆந்த்ரே எபேர் புதுச்சேரியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். அவர்தம் தரகராக நைனியப்பர் நியமிக்கப்பட்டார். நைனியப்பரின் மைத்துனர் திருவேங்கடம் என்பாரின் மகனே ஆனந்தரங்கர் ஆவார். இவர் 1709ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள்



http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner

www.Padasalai.Net

www.TrbTnpsc.com



எம். ஏ. ஜெஸ்டின்

## சிறுவினா

1. நாட்குறிப்பு என்றால் என்ன?
2. நாட்குறிப்புகளின் முன்னோடி என்று அழைக்கப்படுவது எதனை?
3. ஆனந்தரங்கர் ஆற்றிய பணிகள் யாவை?
4. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பால் அறியப்படும் செய்திகள் யாவை?
5. ஆனந்தரங்கர் எங்கு, எப்போது பிறந்தார்? அவருடைய தந்தை பெயர் என்ன?

## ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. புதுச்சேரி வரலாற்றைப் பதிவு செய்தவரில் முதன்மையானவர் யார்?

   ஆனந்தரங்கர்

2. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பால் புதுவையின் எந்த நூற்றாண்டு வரலாற்றை அறியலாம்?

   புதுவையின் 18-ஆம் நூற்றாண்டு

3. 'நாட்குறிப்பின்' ஆங்கிலப் பெயர் என்ன?

   டைரி

4. 'டைரியம்' என்ற இலத்தீன் சொல்லின் மூலச்சொல் என்ன?

   டைஸ்

5. 'EPHEMERIDES' என்பதன் பொருள் என்ன?

   ஒரு நாளுக்கான முடிவு.

6. முகலாய மன்னர்களில் யாருடைய ஆட்சிக்காலத்தில் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் இருந்தது?

   பாபர்

7. எந்த முகலாய மன்னன் நாட்குறிப்பு எழுதும் பழக்கத்தை தடை செய்தான்?

   ஔரங்கசீப்

8. வாஸ்கோடகாமாவின் நாட்குறிப்புகள் யாரால் பதிவு செய்யப்பட்டுள்ளன?

   ஆல்வாரோ வெல்லோ

9. கியோம் ஆந்த்ரே எபேர்க்கு யாருக்குப் பிறகு புதுச்சேரியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார்?

   பிரான்சுவா மர்த்தேன்.

10. கியோம் ஆந்த்ரே எபேரின் தரகர் யார்?

    நைனியப்பர்

11. ஆனந்தரங்கரின் தந்தை பெயர்

    அ) நைனியப்பர் ✓ஆ) திருவேங்கடம்
    இ) ஆந்த்ரே ஈ) ஆல்வாரோ

## பலவுள் தெரிக

1. 'டைரி' என்பது எம்மொழிச் சொல்

   ✓அ) ஆங்கிலம் ஆ) இலத்தீன்
   இ) பிரெஞ்சு ஈ) போர்ச்சுக்கல்

2. 1498-இல் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்குக் கடல் வழியைக் கண்டுபிடித்தவர்

   அ) மெகல்லன் ✓ஆ) வாஸ்கோடகாமா
   இ) பார்த்தலோமியோ டயஸ் ஈ) கலிலியோ

3. ஆனந்தரங்கர் எந்த பிரெஞ்சு ஆளுநரின் மொழிப்பெயர்ப்பாளர்

   அ) பிரான்சுவா மர்த்தேன் ஆ) கியோம் ஆந்த்ரே எபேர்
   இ) நைனியப்பர் ✓ஈ) துய்ப்ளே

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

30ஆம் நாள் சென்னையிலுள்ள பெரம்பூரில் பிறந்தார். தம்முடைய பதினேழு வயதில் தந்தையை இழந்த ஆனந்தரங்கர், பிரெஞ்சு மேலதிகாரி அலனுவார் உதவியால் பரங்கிப் பேட்டை நெசவுச்சாலைக்கும் சாயம் துவைக்கும் கிடங்குக்கும் தலைவராக நியமிக்கப்பட்டார்.

உழைப்பும் உண்மையும் உறுதியும் மிக்க ஆனந்தரங்கர் பிரெஞ்சு ஆளுநர் துய்ப்ளே காலத்தில் தலைமைத் துவிபாஷியாகப் பணியாற்றினார். வல்லாண்மை மிக்க பிரெஞ்சு ஆட்சியரின் நம்பிக்கைக்கு உரியவராக, மிகுந்த அரசியல் செல்வாக்குடன் திகழ்ந்தார்.

ஆனந்தரங்கர், தம்முடைய நாட்குறிப்பில் ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, அந்த நாளின் நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டே செய்திகளை எழுதியுள்ளார். ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் 12 தொகுதிகளாகத் தமிழில் வெளிவந்துள்ளன.


## நாட்குறிப்பு வெளிப்படுத்தும் அரசியல் செய்திகள்

ஆனந்தரங்கர் நாட்குறிப்பு அக்கால கட்டங்களில் புதுவையிலும், தமிழகத்திலும்,



**தெரியுமா?**

உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் சாமுவேல் பெப்பிசு ஆவார். ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய அவர் இரண்டாம் சார்லஸ் மன்னர் காலத்து நிகழ்வுகளை (1660 – 1669) நாட்குறிப்பாகப் பதிவு செய்துள்ளார். இவரைப் போலவே ஆனந்தரங்கரும் 06.09.1736 முதல் 11.01.1761 வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இந்நாட்குறிப்பு இந்தியாவின் முதன்மையான நாட்குறிப்பாகும். இதனால், ஆனந்தரங்கர் இந்தியாவின் பெப்பிசு என்று அழைக்கப்படுகிறார்.



ஆனந்தரங்கரின் கையெழுத்து

தென்னிந்தியாவிலும் நிகழ்ந்த பல்வேறு அரசியல் நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது.

10.09.1736ஆம் நாள் குறிப்பு பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ் நாணய அச்சடிப்பு உரிமையைப் பெற்றதை விளக்குகிறது. இந்த உரிமையைப் பெறுவதற்காக ஆளுநர் செலவழித்த பெருந்தொகையையும் ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ளார்.

பிரெஞ்சுக் கப்பல் தளபதி லெபூர்தொனே ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்த சென்னையை, 1746இல் கைப்பற்றியதையும் அதனால் சினமுற்ற ஆற்காடு நவாபு அன்வர்தீன்கானின் மூத்த மகன் மகபூஸ்கான் பிரெஞ்சு அரசை எதிர்த்துப் போரிட்டதையும் நேரில் கண்டு உரைப்பதுபோல் நாட்குறிப்பில் கூறியுள்ளார்.

தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயருடன் பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு, புகழ் பெற்ற ஆம்பூர் போர் பற்றிய செய்திகள், தஞ்சைக் கோட்டை மீது நடத்திய முற்றுகை, இராபர்ட் கிளைவின் படையெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகை இட்டது முதலியவற்றையெல்லாம் வரலாற்று ஆசிரியர் போன்று நாட்குறிப்பில் விளக்கிக் கூறியுள்ளார்.

1758ஆம் ஆண்டு இறுதியில் சென்னைக் கோட்டை முற்றுகையை லல்லி என்பார் தொடங்கியுள்ளார். கோட்டையை இடித்தும் வீடுகளைத் தரை மட்டமாக்கியும், மதிலை இடித்து அகழியைத் தூர்த்தும் கூடக் கோட்டையை லல்லியால் கைப்பற்ற



http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner

www.Padasalai.Net
www.TrbTnpsc.com



## சிறு வினா

6. ஆனந்தரங்கரின் தந்தையின் இறப்பிற்குப் பிறகு ஆனந்தரங்கர் எப்பொறுப்பை ஏற்றார்?

7. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு எழுதும் முறை யாது?

8. 'சாமுவேல் பெப்பிசு' எழுதிய நாட்குறிப்பு பற்றிக் கூறுக?

9. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பால் [illegible] அறியலாகும் பிரஞ்சு ஆளுநர் டூமாஸ் செய்த செயல் யாது?

10. பிரஞ்சுக் கப்பல் தளபதி லெபூர்தொனே பற்றி ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ள செய்தி யாது?

11. ஆனந்த ரங்கர் வரலாற்று ஆசிரியர் போலத் தினத் நாட்குறிப்பில் குறிப்பிடும் நிகழ்வு யாது? (அல்லது) இராபர்ட் கிளைவ் பற்றி ஆனந்தரங்கர் எழுதியுள்ள குறிப்பு யாது?

12. லல்லி பற்றி ஆனந்த ரங்கர் எழுதியுள்ள குறிப்பு யாது?

## ஒரு மதிப்பெண் வினாக்கள்

15. ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்பு தமிழில் எத்தனைத் தொகுதியாக வெளிவந்துள்ளன?
12

16. உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை யார்?
சாமுவேல் பெப்பிசு

17. இந்தியாவின் பெப்பிசு எனப்படுபவர் யார்?
ஆனந்த ரங்கர்

18. சாமுவேல் பெப்பிசு நாட்குறிப்பு எழுதிய காலம்
1660 முதல் 1669 வரை

19. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு எழுதிய காலம்
06.09.1736 முதல் 11.01.1761 வரை

20. பிரெஞ்சு ஆளுநர் துய்ப்ளே காலத்தில் ஆனந்தரங்கர் ஆற்றிய பணி?
தலைமைத் துவிபாஷி

21. துவிபாஷி என்பதன் தமிழ்ச் சொல் என்ன?
இருமொழியாளர்

## பலவுள் தெரிக

22. முகபூஸ் கானின் தந்தை
அ) அன்வர்தீன் கான் ✓ ஆ) லெபூர்தொனே
இ) இராபர்ட் கிளைவ் ஈ) லல்லி

23. நாணய அச்சடிப்பு உரிமையைப் பெற்ற பிரெஞ்சு ஆளுநர்
அ) துய்ப்ளே ஆ) லெபூர்தொனே
இ) டூமாஸ் ✓ ஈ) பராதி

24. திருச்சிக்கோட்டை மீது படையெடுத்தவர்
அ) இராபர்ட் கிளைவ் ✓ ஆ) லல்லி
இ) டூமாஸ் ஈ) லெபூர்தொனே

25. சென்னைக் கோட்டை முற்றுகையைத் தொடங்கி வைத்தவர்
அ) துய்ப்ளே ஆ) டூமாஸ்
இ) இராபர்ட் கிளைவ் ஈ) லல்லி ✓

www.Padasalai.Net

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

முடியவில்லை. அக்கோட்டையின் கவர்னர் மேஸ்தர் பிகட் மகத்தான வெற்றி பெற்றார்.

## நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள்

இவரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச்சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. பண்பாடு, சமயம், சாதி, நீதி, வணிகம், நம்பிக்கைகள் முதலான பல்வேறு கூறுகள் அடங்கிய நிகழ்வுகளை ஆனந்தரங்கர் பதிவு செய்துள்ளார்.

11.06.1739ஆம் நாள் புதுச்சேரியின் ஆளுநர் துய்மா பிறப்பித்த ஆணையில், புதுச்சேரி பட்டணத்திற்குள்ளேயும், சம்பாக் கோவிலுக்குத் தெற்காகப் போகிற உப்பங்கழி இடத்திலும் பட்டணத்தின் வீதிகள் எவ்விடத்திலும் காலைக்கடன் கழிப்பவர்களிடம் ஆறு பணம் தண்டம் விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மீறியவர்களிடமிருந்து பெறப்பட்ட தண்டத்தொகையில் இரண்டு பணம் பிடித்துக் கொடுப்பவருக்கும், மீதி நான்கு பணம் சாவடிக்கும் உரியது என்று அறிவிக்கப்பட்டது. இது தெரியாமல் பலரும் தண்டம் கட்டியதாக ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

நீதி வழங்குதல், தண்டனை அளித்தல் முதலிய செய்திகளையும் இவருடைய நாட்குறிப்பு பதிவு செய்துள்ளது. பல்வேறு காரணங்களுக்காக மரணதண்டனை வழங்கல், காதறுத்தல், சாட்டையடி, கிடங்கில் போடுதல் முதலிய தண்டனைகள் அக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளன.

> **ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் குறித்து உ. வே. சா.**
>
> தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.

> அந்தக் காலத்தில் நடந்த செய்திகளையெல்லாம் முக்கியமானது, முக்கியமில்லாதது என்று கூடக் கவனிக்காமல், ஒன்று தவறாமல் சித்திரகுப்தன் எழுதி வரும் பதிவைப் போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார், ஆனந்தரங்கர்.
>
> – மகாகவி பாரதியார்

தொடர்ந்து வீடுகளில் திருடி வரும் கும்பல் ஒன்று பிடிபட்டபோது, அவர்களுள் தலைமைத் திருடனைக் கடைத்தெருவில் தூக்கில் தொங்க விட்டனர். ஏனைய இருவருக்கும் இரண்டு காதுகளை அறுத்து, ஐம்பது கசையடி தரப்பட்டது.

ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் பெரும்பகுதி வணிகச் செய்திகளையே விவரித்துள்ளது. கணக்கு வரவு செலவுப் பட்டியல் என அச்செய்திகள் நீண்டுள்ளன. ஆனந்தரங்கரும் பிறரும் வணிகத்திற்கு முதன்மை அளித்துள்ளதை உணரமுடிகிறது. பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கழகம் வணிகர் பலரைப் பங்குதாரராகக் கொண்ட கூட்டு நிறுவனம் ஆகும். தமது மூலதனத்திற்கு ஏற்ப ஒவ்வோராண்டும் எத்தனை கப்பல்களைக் கீழை நாடுகளுக்கு அனுப்புவது என்பது முன்பே திட்டமிடப்பட்டது. புதுச்சேரியில் இருந்து மணிலாவுக்குச் சென்ற கப்பலில் அழகப்பன் என்ற தமிழ் மாலுமி பணியாற்றியதையும் அவர் பதிவு செய்துள்ளார்.

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு ஆறு திங்கள் தேவைப்பட்டன. 11.11.1737 அன்று பிரான்சிலிருந்து புறப்பட்ட கப்பல் 08.05.1738 அன்று புதுச்சேரியை அடைந்துள்ளது. கப்பல் வந்தவுடன் பீரங்கி முழங்குதல் வழக்கத்தில் இருந்துள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் துணிகளுக்காக வர்த்தகரிடமும் தரகரிடமும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. சிலர், கழகத்தின்

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## குறுவினா

13. எக்காரணங்களை எல்லாம் ஆனந்தரங்கர் தனது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்?

14. எங்கெல்லாம் காலைக்கடன் கழிக்கத் தடை இருந்தது?

15. நாட்குறிப்பில் குறிப்பிடப்படும் தண்டனைகள் யாவை?

16. ஆனந்தரங்கர் நாட்குறிப்புக்குறித்து உ.வே.சா கூறுவது என்ன?

17. கப்பல் வந்ததும் என்ன நடைமுறை பின்பற்றப்பட்டது?

18. ஆனந்தரங்கர் குறித்து மகாகவி பாரதியார் கூறுவது என்ன?

## II சிறுவினா

1. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பில் காணப்படும் சமுதாயச் செய்திகளைக் குறிப்பிடுக.

2. ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் காணப்படும் வணிகச் செய்தி பற்றி எழுதுக.

3. ஆனந்தரங்கர் காலத்தில் வர்த்தகம் எவ்வாறு நடைபெற்றது?

## ஒரு மதிப்பெண் வினாக்கள்

26. காலைக்கடன் கழிப்பவர்களிடம் தண்டனையாக எவ்வளவு பணம் பெறப்பட்டது?
ஆறு பணம்

27. மணிலாவுக்குச் சென்ற கப்பலில் இருந்த தமிழ் மாலுமி யார்?
அழகப்பன்

28. தலைமைத் திருடனுக்குக் கிடைத்த தண்டனை யாது?
தூக்குத் தண்டனை

29. இரண்டு திருடர்கள் பெற்ற தண்டனை யாது?
காதுகள் அறுக்கப்பட்டன. ஐம்பது கசையடிகளும் கொடுக்கப்பட்டன.

30. 11.11.1737 அன்று பிரான்சிலிருந்து புறப்பட்ட கப்பல் என்று புதுச்சேரியை அடைந்தது?
08.05.1738

## பலவுள் தெரிக

31. சாவடிக்குச் செலுத்த வேண்டிய தண்டத் தொகை
அ) ஆறு பணம் ஆ) நான்கு பணம்
இ) இரண்டு பணம் ஈ) ஐந்து பணம்

32. திருடிய இருவருக்கும் வழங்கப்பட்ட கசையடி எத்தனை
அ) இருபது ஆ) முப்பது
இ) ஐம்பது ஈ) நாற்பது

33. கப்பல் ஐரோப்பாவிலிருந்து இந்தியா வர ஆகும் காலம்
அ) எட்டு திங்கள் ஆ) மூன்று திங்கள்
இ) ஆறு திங்கள் ஈ) இரண்டு திங்கள்

www.Padasalai.Net

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

Scanned by CamScanner

வர்த்தகர் என்ற அங்கீகாரத்தைப் பெற்றிருந்தனர். துணிகள், வர்த்தகருக்கு விற்கப்பட்டபோது உரிய இரசீதுகள் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. 100க்கு 320 என்ற விகிதத்தில் அவர்கள் ஆறு திங்களுக்குள் கழகத்திற்குப் பணத்தைச் செலுத்திவிடுவதாகவும் கையெழுத்திட்டுக் கொடுத்தனர். வணிகக் கழகத்தின் அதிகாரியான கொர்னே இவற்றைப் பெற்றுப் பாதுகாத்துள்ளார்.

புதுச்சேரியில் நாணயம் அச்சிடும் உரிமையை நிஜாமிடமிருந்து பிரெஞ்சு வணிகக் கழகம் பெற்றது. இதற்கான ஆணையை 10.09.1736 அன்று கனகராயர் பல்லக்கில் வைத்து ஊருக்குள் கொண்டு வந்தார். 21 பீரங்கிகள் முழங்கின. எட்டு மாற்றுக்குக் குறைவான வராக நாணயங்களை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்று பிரெஞ்சு மன்னரின் ஆணையின் பேரில் 1739ஆம் ஆண்டு மே திங்களில் அறிவிக்கப்பட்டது. பல்வேறுவிதமான வராகன்களை ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ளார். அவை புதுச்சேரிப் பிறை வராகன், சென்னைப் பட்டணத்து நட்சத்திர வராகன், வட்ட வராகன், பரங்கிப் பேட்டை வராகன், ஆரணி வராகன் முதலியன.

**ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்கள்**

| | |
|---|---|
| 480 காசு | – ஒரு ரூபாய் |
| 60 காசு | – 1 பணம் |
| 8 பணம் | – 1 ரூபாய் |
| 24 பணம் | – ஒரு வராகன் |
| 1 பொன் | – 1/2 வராகன் |
| 1 வராகன் | – 3 அல்லது 3.2 ரூபாய் |
| 1 மோகரி | – 14 ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயம் |
| 1 சக்கரம் | – 1/2 வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்க நாணயம். |

## ஆனந்தரங்கரின் திறமைகள்

1745ஆம் ஆண்டு 21ஆம் நாள் வியாழக்கிழமை மாலைப் பொழுதிலே வீசிய பெருங்காற்று புதுச்சேரியைச் சூறையாடியதனை,

"அஸ்தமித்த உடனே துவங்கிப் பெருங்காற்று அடித்தது. ஊரிலே உண்டான மரங்களெல்லாம் படுகாடாய் விழுந்து போனதும், வீடுகள் வெள்ளத்தில் முழுகிப்போய், அந்த வெள்ளத்திலே வீடுகளை அடித்துக்கொண்டு போனதும், மாடுகள், கன்றுகள், மனுஷர் செத்ததும் தெருவுக்குத்தெரு பிணநாற்றமாய் இருந்தது!"

என்று மனம் நொந்து எழுதியுள்ளார்.

இப்பேரிடர் புதுச்சேரியில் நிகழ்ந்தபோது மக்கள் எல்லாம் உணவும் நீரும் இன்றி வாடியுள்ளனர். அப்போது ஒழுகரையிலே கனகராயர், பெருஞ்சோறு அளித்துத் தமிழரின் இரக்கத்தையும் ஈரத்தையும் வெளிப்படுத்தியதை ஆனந்தரங்கர் பெருமிதத்துடன் பதிவு செய்துள்ளார்.

இங்கிலாந்திற்கும், பிரான்சுக்கும் இடையே போர் மூண்டதால் கப்பல் வணிகம் பெரிதும் தடைபட்டது. புதுச்சேரிக்குக் கப்பல்களின் வருகை 1745ஆம் ஆண்டில் தடைபட்டுப் பெரும் பொருளாதாரத் தட்டுப்பாடு தோன்றியது. புதுச்சேரி வணிகம் முழுவதும் வீழ்ந்தது. மக்கள் எல்லோரும் கப்பல் வருகையையே எதிர்பார்க்கத் தொடங்கினர். ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்கக்கூடப் பணம் இல்லாமல் ஆளுநர் துன்பப்பட்டார். இந்நிலையில் 08.06.1746ஆம் நாள் லெபூர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் புதுவைக்கு வந்தன. இது பற்றி ஆனந்தரங்கர், "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும், நீண்டநாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போலவும்,


Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



எம். ஏ. ஜெலஸ்டின்

## சிறுவினா

19. வராகன் குறித்து பிரெஞ்சு மன்னர் வெளியிட்ட ஆணை என்ன?

20. ஆனந்தரங்கர் குறிப்பிடும் பல்வேறு வராகன் பற்றி ~~கு.~~ எழுதுக?

21. 1745-ஆம் ஆண்டு புதுச்சேரியில் வீசிய சூறைக் காற்று பற்றி ஆனந்தரங்கர் குறிப்பிடுவது யாது?

22. தமிழரின் இரக்கம் குறித்து ஆனந்தரங்கர் பெருமிதத்துடன் செய்துள்ள பதிவு யாது?

23. ஒன்பது கப்பல் வந்த செய்தி குறித்து ஆனந்தரங்கர் குறிப்பிடுவது யாது?

## ஒரு மதிப்பெண் வினாக்கள்

34. 100-க்கு ______ என்ற விகிதத்தில் ஆறுவாரத்தில் கழகத்தில் பணம் செலுத்த வேண்டுமென்று கொடுக்கப்பட்டது.

320

35. வணிககழகத்தின் அதிகாரி யார்?

கொர்னே

36. நாணயம் அச்சிடும் உரிமையை யாரிடமிருந்து பிரெஞ்சு வணிகக்கழகம் பெற்றது?

நிஜாம்

37. ஒரு ரூபாய் என்பது எத்தனை காசு?

480 காசு

38. 8 பணம் எத்தனை ரூபாய்?

1 ரூபாய்

39. 1 பணம் எத்தனை காசு?

60 காசு

40. 1 பொன் என்பது எவ்வளவு வராகன்?

1/2 வராகன்

41. 1 வராகனின் ரூபாய் மதிப்பு எவ்வளவு?

3 அல்லது 3.2 ரூபாய்

42. 14 ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயம் எத்தனை மோகரி ஆகும்?

1 மோகரி

43. ஒரு சக்கரம் என்பது ______.

1/2 வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்க நாணயம்.

44. வெதூர் தொனேவின் 9 கப்பல்களும் என்று புதுவைக்கு வந்தன.

08.06.1746

45. புதுச்சேரிக்குக் கப்பல் வருகை தடைப்பட்ட ஆண்டு எது?

1745

## பலவுள் தெரிக

46. ஒரு வராகன் என்பது
அ) 24 பணம் ஆ) 42 பணம்
இ) 12 பணம் ஈ) 8 பணம்

47. புதுச்சேரியில் பேரிடர் நிகழ்ந்த போது பெருஞ்சோறு அளித்து உதவிய தமிழர்
அ) நைநியப்பர் ஆ) திருவேங்கடம்
இ) கனகராயர் ஈ) சேஷ்வராயர்

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

PAGE NO.
DATE

# இயல்-6 உரைநடை உலகம்

## பாடம் : ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

### ஆனந்தரங்கர் நாட்குறிப்பு விவரிக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| 1735 | பிரெஞ்சு ஆணையர் டுமாஸ் நாணய அச்சடிப்பு |
| | உரிமையை பெற்று, நிஜாமிடமிருந்து பெற்று |
| 1736 | → பல்லக்கில் துணைக்ராயர் கொண்டு வந்தது |
| 1737 | → பிரான்சிலிருந்து கப்பல் புறப்பாடு |
| 1738 | → பிரான்சிலிருந்து புறப்பட்ட கப்பல் புதுச்சேரி வந்தது |
| 1739 | → ஆளுநர் துய்மாவின் ஆணை, எட்டு |
| 1740 | மாற்றுக் குறைவான வராக நாணயங்கள் |
| 1741 | வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்ற |
| 1742 | பிரெஞ்சு மன்னர் ஆணை அறிவிப்பு |
| 1743 | |
| 1744 | |
| 1745 | → மாலைப்பொழுதினில் வீசிய காற்று புதுச்சேரியை |
| 1746 | சூறையாடியது, புதுச்சேரிக்கு கப்பல் வருகை தொ |
| 1747 | → பெயுர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் |
| 1748 | புதுவைக்கு வருகை, பெயுர்தொனே |
| 1749 | சென்னையை கைப்பற்றுதல். |
| 1750 | |
| 1751 | |
| 1752 | |
| 1753 | |
| 1754 | |
| 1755 | |
| 1756 | |
| 1757 | |
| 1758 | → சென்னை கோட்டை முற்றுகை லல்லி துவக்கம் |
| 1759 | → புதுச்சேரியை காக்க ஆங்கிலேயர்கள் |
| 1760 | கப்பல் வருகை |
| 1761 | → ஆனந்தரங்கர் மறைவு, நாட்குறிப்பின் |
| 1762 | முடிவு. |

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# இயல் - 6

## ஆனந்தரங்கர் நாட்குறிப்பு.

| | | |
|---|---|---|
| 1735 | | பிரெஞ்சு ஆளுநர் நாணய அச்சடிப்பு உரிமையைப் பெறுதல், |
| 1736 | ----→ | நாணய அச்சிடும் உரிமையை நிஜாமிடமிருந்து கனகராயர் பல்லக்கில் ஊருக்கு கொண்டுவருதல். |
| 1737 | ----→ | பிரான்சிலிருந்து கப்பல் புறப்படல். |
| 1738 | ----→ | பிரான்சிலிருந்து புறப்பட்ட கப்பல் புதுச்சேரி வந்தடைதல். |
| 1739 | ----→ | ஆளுநர் துய்மாவின் ஆணை, வட்டு மாற்றுக்கு குறைவானவராக நாணயத்தை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்ற பிரெஞ்சு மன்னர் ஆணை அறிவிப்பு. |
| 1740 | | |
| 1741 | | |
| 1742 | | |
| 1743 | | |
| 1744 | | மாலைப்பொழுதில் வீசியகாற்று புதுச்சேரியைச் சூறையாடியது. |
| 1745 | ----→ | புதுச்சேரிக்கு கப்பல் வருகை தடை. |
| 1746 | ----→ | லெபூர்தோனேவின் ஒன்பது கப்பல்கள் புதுவைக்கு வருகை. |
| 1747 | | லெபூர்தோனே சென்னையை கைப்பற்றுதல். |
| 1748 | | |
| 1749 | | |
| 1750 | | |
| 1751 | | |
| 1752 | | |
| 1753 | | |
| 1754 | | |
| 1755 | | |
| 1756 | | |
| 1757 | | |
| 1758 | ----→ | சென்னைக் கோட்டை முற்றுகைப் போர் தொடக்கம். |
| 1759 | | |
| 1760 | ----→ | புதுச்சேரியைத் தாக்க ஆங்கில கப்பல்கள் வருகை |
| 1761 | ----→ | ஆனந்தரங்கர் மறைவு, நாட்குறிப்பின் முடிவு. |
| 1762 | | |

www.Padasalai.Net

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள்; அதைக் காகிதத்தில் எழுத முடியாது" என்று நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

### ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்புகள்

அவருடைய இறுதிக்கால நாட்குறிப்புகள் ஆங்கிலேயர் புதுச்சேரி மீது நிகழ்த்திய முற்றுகையையும் புதுச்சேரியின் வீழ்ச்சியையும் மிக விரிவாகப் பேசியுள்ளன. 1760 பிப்ரவரியில் புதுச்சேரியைத் தாக்க ஆங்கிலேயக் கப்பல்கள் வந்துகொண்டிருந்ததாகவும் செஞ்சியைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்று ஆங்கிலத் தளபதி, புதுச்சேரியை நெருங்கிவிட்டதாகவும் தகவல் வந்துள்ளது. ஆங்கிலேயப் படைகள் சாரம்வரை வந்துவிட்டதைப் பொதுமக்கள் வேடிக்கை பார்த்தனர். குண்டு சாலையை ஆங்கிலேயர் பிடித்ததும் புதுச்சேரி நகரில் பீதி நிலவியது. தேவனாம்பட்டணத்தில் மேலும் மேலும் துருப்புகளை ஆங்கிலேயக் கப்பல்கள் இறக்கின. புதுச்சேரியைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர்.

> புதுச்சேரியின் ஆளுநராக லெறி இருந்த காலத்தில், புதுச்சேரியின் இராணுவ அரசியல் செய்திகளை முகலாயருக்கும், ஆங்கிலேயருக்கும் கூறுவதாக ஆனந்தரங்கர் மீது பழி சுமத்தப்பட்டது.
>
> அப்போது ஆளுநரிடம், ஆனந்தரங்கர், "இப்பட்டணத்தில் உம்முடைய அதிகாரம்தான் இறுதியானது. அநீதியாகவும் உண்மைக்கு மாறாகவும் நடக்க நீர் விரும்பினால் உம்மைத் தடுக்கும் அதிகாரம் ஒருவருக்கும் இல்லை. ஆகவே, என்னைக் காவலில் போட விரும்பினால் உடனே செய்யலாம். பிற தண்டனையும் வழங்கலாம். இரண்டு சல்லிகூட நான் செலுத்த மாட்டேன். சிறையில் அடைத்துவிடுவீர் எனப் பயந்து ஒரு வாரத்தில் பணம் தருவேன் என்று நீர் கருத வேண்டாம்.
>
> (தொகுதி. 11 பக்.81–84)

> **ஆனந்தரங்கர் பற்றிய நூல்கள் சில**
>
> 1. ஆனந்தரங்கன் கோவை – தியாகராய தேசிகர்
> 2. ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் – புலவரேறு அரிமதி தென்னகன்
> 3. வானம் வசப்படும் – பிரபஞ்சன்

புதுச்சேரியின் இவ்வாறான சூழ்நிலையில் ஏற்கெனவே நோய்வாய்ப்பட்டு இருந்த ஆனந்தரங்கரின் உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. 12.01.1761 திங்கள் கிழமை ஐந்து நாழிகைக்குப் பட்டணத்தின் மீது பீரங்கிக் குண்டுகள் விழுந்து கொண்டிருந்த வேளையில் ஆனந்தரங்கர் மறைந்தார்.

1736ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் நாள் தொடங்கி ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகாலத் தென்னிந்திய வரலாற்றைப் பதிவுசெய்த ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 1761ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் நாளோடு முடிவடைந்துள்ளது. புதுச்சேரியின் முற்றுகை பற்றிய முடிவினைக் கூறாமலேயே நாட்குறிப்பும் முடிந்துள்ளது. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு 12 தொகுதிகளாகத் தமிழில் வெளிவந்துள்ளது. இது வெளிப்படுத்தும் விரிவான செய்திகளை, வரலாற்றறிஞர் தம் குறிப்புரைகளின் துணையோடு கண்டறிய முடியும்.

**கற்பவை கற்றபின்...**

1. உங்களது ஒரு வாரத்திய நிகழ்வுகளை நாட்குறிப்பில் பதிவு செய்க.
2. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு விவரிக்கும் நிகழ்வுகளைக் காலக்கோட்டில் அமைத்துக் காட்டுக.



http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner

www.Padasalai.Net
www.TrbTnpsc.com



## குறுவினா

24. ஆனந்தரங்கரின் அஞ்சாமையை வெளிப்படுத்தும் நிகழ்வினைக் குறிப்பிடுக.

25. ஆனந்தரங்கர் பற்றிய நூல்கள் யாவை?

26. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு என்று தொடங்கி என்று முடிவடைகின்றது?

## II சிறுவினா

4. ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்புப் பற்றி எழுதுக

## ஒருமதிப்பெண் வினாக்கள்

48. ஆனந்தரங்கர் என்று மறைந்தார்?
    12.01.1761, திங்கள் கிழமை

49. 'ஆனந்தரங்கன் கோவை' என்ற நூலை எழுதியவர்?
    தியாகராய தேசிகர்

50. 'ஆனந்தரங்கன் பிள்ளைத் தமிழ்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
    புலவரேறு அரிமதி தென்னகன்

## பலவுள் தெரிக

51. வானம் வசப்படும் நூலின் ஆசிரியர்
    அ) அப்துல் கலாம் ஆ) அப்துல் ரகுமான்
    இ) புதுமைப்பித்தன் ஈ) பிரபஞ்சன்

52. யாருடைய ஆட்சிக் காலத்தில் ஆனந்தரங்கர் மீது பழி சுமத்தப்பட்டது.
    அ) லெறி ஆ) டூமாஸ்
    இ) டியூப்ளே ஈ) சியூமா

www.Padasalai.Net

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html
Scanned by CamScanner